# தமிழ்மொழியும் இலக்கியமும்

## செயலட்டை 04 இலக்கியத்தொகுப்பு பகுதி III தரம் 10

## தனிப்பாடல்கள்

1. தனிப்பாடல்கள் என்றால் என்ன?

2.“ **பங்கப்பழனத்து உழும் உழவர்**
**பலவின் கனியை பறித்ததென்று...**
அ. இங்கு பழனம் என்பதன் பொருள்?

ஆ. பங்கம் என்பது உணர்த்தும் கருத்து யாது?

3. “ **கொங்கர்க்கு அமராபதி அளித்த**
**கோவே இராச குலதிலகா..”**
அ. இங்கு எந்த மன்னன் சிறப்பிக்கப்படுகின்றான்?

ஆ. அமராபதி எனப்படுவது யாது?

4. “ **வெங்கட் பிறைக்கும் கரும்பு இறைக்கும்**
**மெலிந்து அம்பு இறைக்கும் விழிவேலே... ”**
அ. வெங்கட் பிறை என்பதன் கருத்து?

ஆ. கரும்பு இறை என்பதன் கருத்து?

இ. விழிவேல் என்பதில் உள்ள அணி?

5. இப் பாடலில் சோழ நாட்டின் வளம் எவ்வாறு வெளிப்படுகின்றது ?

6. சோழ மன்னன் வீரம், சிறப்பு எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது ?

7. “**ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்**
**கார் தட்டிய பஞ்ச காலத்திலே...**
அ. இப் பாடலைப் பாடியவர் யார்?

ஆ. இங்கு கார் தட்டிய என்பதன் கருத்து யாது?

8. “**ஆர் தட்டினும் தட்டு வராமலே அன்னதானத்திற்கு**
**மார் தட்டிய துரைமால் சீதக்காதி வரோதயனே**...
அ. இவ்வடிகளின் சிறப்பிக்கப்படும் வள்ளல் யார்?

ஆ. வரோதயன் என்பதால் கருதப்படுவது யாது?

9. **இப் பாடலில் பஞ்ச காலத்தின் கொடுமை எவ்வாறு வெளிக்காட்டப்படுகின்றது?**

10. **சீதக்காதி வள்ளலின் கொடைத் திறன் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?**

11. “ **கழியும் பிழை பொருள் தள்ளி நன்னூலாம்**
**கடலில் உண்டு...**

அ. கழியும் பிழைபொருள் என்பதால் கருதப்படுவது?

ஆ. நல்னூலாம் கடல் என்பதில் உள்ள அணி?

12. “ **வழியும் பொதிகை வரையினில் கால் கொண்டு**
**வண் கவிதை மொழியும் புலவர்...**

அ. இதில் பொதிகை வரை என்பது உணர்த்தும் பொருள்?

ஆ. வண் கவிதை என்தால் கருதப்படுவது?

13. இப் பாடலில் காளமேகப்புலவரின் கவிச் சிறப்பு வெளிப்படும் தன்மை யாது?

14. புலவரின் கற்பனைத் திறன் எவ்வாறு வெளிப்படுகின்றது?

15.“ **ஆடிக் குடத்து அடையும் போதே இரையும்**
**மூடி திறக்கின் முகம் காட்டும்...**

அ. இங்கு ஒப்பிடப்பட்ட இரு பொருட்களும் எவை?

ஆ. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள அணி யாது?

16 “ **ஓடி மண்டை பரபர எனும் பாரில் பிண்ணாக்கு உண்டாம்...**

அ. பிண்ணாக்கு என்தன் கருத்து யாது?

ஆ. பிண்ணாக்கு என்பது பாம்பு, எள்ளு என்பவற்றிற்கு எவ்வாறு ஒப்பாகின்றது?

17 . அ. காளமேகப்புலவரின் இயற்பெயர் யாது?

ஆ. காளமேகப்புலவருக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர்?

18. இப்பாடலில் பாம்பு, எள்ளு என்பவற்றின் ஒத்த தன்மைகளை எடுத்துக்காட்டுக?